www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V10T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

-----

வகுப்பு 10

காலஅளவு : 3.00 மணி நேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 100

குறிப்பு: 1. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.
2. இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
3. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I (மதிப்பெண்கள் - 15)

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15×1=15**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளுள் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ..............
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) காசிக்காண்டம் என்பது ..............
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

3) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

4) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..............
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ..............
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

6) அருந்துணை என்பதைப் பிரித்தால் ..............
அ) அருமை+துணை ஆ) அரு+துணை
இ) அருமை+இணை ஈ) அரு+இணை

7) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ..............
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

8) கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் உம்மைத்தொகையை எடுத்து எழுதுக.
அ) மலர்க்கை ஆ) சாரைப்பாம்பு இ) வீசுதென்றல் ஈ) அண்ணன் தம்பி

9) குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.
பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் - ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே ..............
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

10) 'ஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்' என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு

11) 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.
அ) கான் அடை - காட்டைச் சேர்
ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை - காலால் நடத்தல்
ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

''வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே''

12) இப்பாடலின் ஆசிரியர் ............
அ) குமரகுருபரர் ஆ) இளங்கோவடிகள்
இ) குலசேகராழ்வார் ஈ) கம்பர்

13) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்கள் ............
அ) வாளால் - மாளாத ஆ) மாளாத - மாயத்தால்
இ) நோயாளன் - மாயத்தால் ஈ) வாளால் - காதல்

14) இப்பாடல் இடம்பெறும் நூல் ............
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்
இ) நீதிவெண்பா ஈ) பெருமாள் திருமொழி

15) 'மாளாத' - என்ற சொல்லின் பொருள் ............
அ) நினைக்காத ஆ) தீராத இ) சுட்டாத ஈ) விளையாடாத

## பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4×2=8

16) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

17) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

18) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்ற உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.

19) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:**
அ) கலைகள் மனித வாழ்விற்கு அழகூட்டுபவை.
ஆ) கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்.

21) 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5×2=10

22) ''உரைத்த'' **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

23) **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க:**
(அ) முத்துப்பல் (ஆ) எழுகதிர்

24) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

25) **அகராதியில் காண்க:** (அ) ஆர்கலி (ஆ) உழுவை

26) ''உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்'' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

27) **பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க:**
(அ) கொஞ்சம் அதிகம் (ஆ) முன்னுக்குப் பின்

28) **கலைச்சொற்கள் தருக:**
(அ) Discussion (ஆ) Irrigation

## பகுதி - III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

29) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டவனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை,

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

வாற்கோதுமை முதலிய சில வகைகளே உண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?

ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.

இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.

30) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் .......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ...... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

## பிரிவு - 2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32) 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

33) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34) **அடிபிறழாமல் எழுதுக:**

அ) "தூசும் துகிரும் ........" - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**(அல்லது)**

ஆ) "சிறுதாம்பு தொடுத்த ........" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்.

## பிரிவு - 3

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

**- இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.**

36) தன்மையணியைச் சான்றுடன் விளக்குக.

37) "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்"

- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் - 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) "மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே"

*- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.*

39) அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளிக்குச் செல்லும்போது சாலையில் கிடந்த பணப்பையை காவல்துறையிடம் ஒப்படைத்தமைக்கு, நேர்மைக்கான விருதுபெற்ற உன் நண்பனைப் பாராட்டி மடல் எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) மதுரை மாவட்டம், அழகப்பாநகர், சுந்தரம் தெருவில் உள்ள 110 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் அன்பழகனின் மகன் குமரன், அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கூடைப்பந்து விளையாட்டில் பயிற்சிபெற விரும்புகிறார். தேர்வர், தம்மைக் குமரனாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42) அ) நாம் மற்றவர்களிடம் இன்சொல் பேசினால் என்ன விளையும்? தீய சொற்கள் பேசினால் என்ன விளையும்? இரண்டிற்கும் ஐந்தைந்து விளைவுகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க:**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24) 3×8=24

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.**

43) அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக:**

> **மகளிர் நாள் விழா**
>
> இடம் : பள்ளிக் கலையரங்கம் — நாள் : 20.01.2022
>
> கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

45) அ) உன் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'மரம் நடுவிழா'வுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்பு படை' சார்பாக நன்றியுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) **குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக:**

முன்னுரை - கல்பனா சாவ்லா - இளமைப் பருவம் - விண்வெளிப் பயணம் - விருதுகளும் அங்கீகாரங்களும் - விண்வெளியில் தமிழரின் அறிவு - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com